O.S. No: 73/2017

பெயர் : அய்யப்பன்

**வா.சா.1**

06-02-2025

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் வாதி கலியமூர்த்தியின் மனைவி பெயர் அசலாம்பாள் . முதல் வாதிக்கும் அவர் மனைவி அசலாம்பாளுக்கும் குழந்தைகள் கிடையாது . அசலாம்பாள் என் அப்பாவின் தங்கச்சி . கலியமூர்த்தி அத்தை வீட்டுக்காரர் . இந்த வழக்கில் கலிமூர்த்தி எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் தான் நான் தரப்பினராக சேர்க்கப்பட்டேன் என்றால் ஆமாம் . கலியமூர்த்தி முதல் பிரதிவாதியிடம் 1 லட்சம் ரூபாய் கடன் கேட்டு அதற்கு மோசடியாக பத்திரம் தயார் செய்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் . அந்த 1 லட்சத்தை கலியமூர்த்தி வாங்கிக்கொண்டாரா என்றால் வாங்கிக்கொண்டார் . அந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை முதல் வாதியிடமிருந்து 1 ஆம் பிரதிவாதி பத்திரம் பதிவு செய்யும் போது , நான் பதிவாளர் அலுவலகத்தில் இல்லை. முதல் பிரதிவாதி இடத்தை பதிவு செய்து கொண்டதாக சொல்லி கேட்ட போது தான் , என் மாமாவுக்கும் எனக்கும் மோசடியாக எழுதி வாங்கிய விவரம் தெரியும். முதல் வாதி முழு கிரைய தொகையையும் பெற்றுக்கொண்டு முதல் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல . 15/07/2016 கிரைய பத்திரம் பற்றி என் மாமாவுக்கு மட்டும் தான் தெரியும் . அதை பற்றி நான் சாட்சியமளிக்க இயலாது என்றால் சரியல்ல . தாவா சொத்திற்கான பத்திரம் என் மாமா பெயரில் உள்ளது. தாவா சொத்திற்கான பட்டா மற்றும் வருவாய் ஆவணங்கள் முதல் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல . தாவா சொத்தின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் முதல் பிரதிவாதி தான் இருக்கிறார் என்றால் சரியல்ல. நானும் என் அத்தையும் இருக்கிறோம் . 1, 2 பிரதிவாதிகளிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . தாவா சொத்தை பொறுத்து வா .சா.ஆ. 1 அடமானத்திற்காக ஏற்பட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . 3 வது பாராவில் 1 வது பிரதிவாதிக்கு 2 ஆம் பிரதிவாதி கணவர் என்று

கூறிகொள்வதாக சொல்லிக்கொள்வது தவறு என்றால் சரியல்ல . 2 ஆம் பிரதிவாதிக்கு முதல் பிரதிவாதி 2 ஆம் மனைவி. முதல் பிரதிவாதி முதல் வாதியிடம் சரியான பிரதிபிரயோஜனத்திற்கு எழுதி வாங்கியுள்ளார் என்றாலும் அது சட்டப்படி நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல . என் பெயரில் ஏற்பட்டதாக சொல்லப்படும் உயில் மோசடியானது என்றால் சரியல்ல . இந்த வழக்கிற்கும் கலியமூர்த்திக்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கலியமூர்த்தி முதல் பிரதிவாதிக்கு வா .சா.ஆ.1 எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் சொத்து எனக்கு சொந்தமில்லை . கலியமூர்த்திக்கு தான் சொந்தம். வா.சா.ஆ.1 ஆவணம் முறையாக சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரி . சார் பதிவாளர் அலுவலகத்தில் தவறு நடந்ததாக என் கட்சி இல்லை. முதல் பிரதிவாதி தவறாக நடந்துக்கொண்டதாக தான் என் கட்சி . நடைமுறைகளை பின்பற்றி தான் இந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதால் நான் கேட்பதால் அதை ரத்து செய்ய முடியாது என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.